உ

ஓம்

சர்வான்ம சொருபனே நம:

ஆத்மஞான நிலையின் அன்பின் பிரவாகம்.

இஃது [illegible]

தஞ்சை [illegible]

சென்னை - சூளை, [illegible]லயம்

ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுருசுவாமி அவர்கள்

அருளியது.

ஓம்

திருவாளர். பாலுசாமி பிள்ளை அவர்களாலும்,
திருவாளர். துரைசாமி முதலியார் அவர்களாலும்
அச்சியற்றி, எல்லோருக்கும்
நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

மேலும் இந்நூலை அச்சியற்றி வெளியிட
விருப்பமுள்ளவர்கள் வெளியிடலாம்.

1952

ஸ்ரீ பாரதி பிரஸ், சூளை, சென்னை.

5-6

உ
ஓம்
சர்வான்ம சொரூபனே நம:

ஆத்ம ஞான நிலையின் அன்பின் பிரவாகம்.

எழுசீர் விருத்தம்.

உருவமும் ஞானம் உண்மையு மறைக்கும்
ஒப்பிலா மாயையு மற்றும்
சருவமும் நீத்து ஆத்மஞா னத்தைச்
சார்ந்து அந் நிலைதனுட் சேரும்
பருவமும் உற்ற உண்மையாம் அன்பைப்
படைத்ததின் பிரவாகம் கூற
அருவமும் ஆன்ம சொரூபமாய் விளங்கும்
ஆனந்தப் பொருள் தனை நினைவாம்.

நூல்.

ஆத்மஞானமென்னும் இளஞ் சூரியன் இதோ உதயமாயினன். இதோ உதயமாயினன். உபசாந்தமாகவும், அழகாகவும், இன்பமாகவும், இதோ உதயமாயினன். தன் சொரூபமாகிய பேரொளியால் மாயை என்னும் அஞ்ஞானமாகிய வலிய இருளை நீக்கித் தனது திவ்ய கண்களால் என்னை நோக்கித் தனது கிரணங்களென்னும் திருக்கரங்களால்இதோ

பார், இதோ பார் என எங்கும் சுட்டிக் காட்டுகின்ருன். எங்கும் காட்டுகின்ருன். ஆஹா! இது என்ன ஆச்சரியம், இது என்ன அற்புதம், இது என்ன ஆனந்தம், இவ்வுலகில் எங்கினும், எவ்விடத்திலும் ஒரே பிரகாசமாகவல்லவா விளங்குகின்றது. இவ்வுலகில் தோன்றும் எவ்வுயிரும், எவ்வுருவும், எப்பொருளும், எல்லாம் நம் சொரூபமாகவல்லவா காண்கின்றது. நம் சொரூபமல்லாது வேறெதுவும் காணேமே இதற்குமுன் இவ்வுலகம் இரவு பகலாகவும் இவ்வுலகிலுள்ள சர்வமும் பற்பலவாகவும், வெவ்வேராகவும், பேதாபேதமாகவும், துவேசமாகவும், உயர்வு தாழ்வாகவும், சிறிது பெரிதாகவும், விருப்பு வெறுப்பாகவும், நன்மை தீமையாகவும், இன்பதுன்பமாகவும் கோபமாகவும் காணப்பட்டதே. இப்பொழுது இவ்வுலகம் என்றும் ஒரே பகல் காலமாகவும் இவ்வுலகிலுள்ள சர்வமும் நம் சொரூபமாகவும் ஆனந்தமாகவும் காணப்படுகின்றதே. நமக்கன்னியமாக வேறு எதுவும் காணேமே அவைகளெல்லாம் எங்கே மறைவுற்றன இது என்ன வேடிக்கையாக இருக்கின்றது. ஆனல் நாம் இப்பொழுது நினைவில் இருக்கின்ருேமா அல்லது நித்திரையோடும் கூடிய கனவில் இருக்கின்ருேமா, நினைவிற்தான் இருக்கின்ருேம். அல்லது இவ்வுலகம் நாம் முன்னிருந்த பூவுல

கமா அல்லது வேறு உலகமா. பூவுலகிற்தாம் இருக்கின்றோம்.

இதற்குமுன் பார்த்த கண்களால் பார்க்கின்றோமா அல்லது வேறு கண்களாற் பார்க்கின்றோமா அதே கண்களாற்தான் பார்க்கின்றோம். ஆனால் மனமானது அதே மனந்தானா அல்லது வேறு மனமா. அதே மனந்தான் இருக்கின்றது. ஆன்மா அதே ஆன்மாதானா அல்லது வேறு ஆன்மாவா அதே ஆன்மாவாகத்தான் இருக்கின்றோம். முன்னிருந்த சரீரம்தானா அல்லது வேறு சரீரமா அதே சரீரமாகத்தான் இருக்கின்றது. முன்னிருந்த அறிவுதான் இருக்கின்றதா அல்லது வேறு அறிவு இருக்கின்றதா அதே அறிவுதான் இருக்கின்றது. அதே ஆன்மகோடிகள்தாம் இருக்கின்றார்களா அல்லது வேறு ஆன்மகோடிகளா அதே ஆன்மகோடிகள் தாம் இருக்கின்றார்கள். ஆனால் நாம் பைத்தியநிலைமையோடு இருக்கின்றோமா அல்லது எதார்த்த நிலைமையோடு இருக்கின்றோமா எதார்த்த நிலைமையோடுதான் இருக்கின்றோம்.

அப்படி இருந்தால் ஏன் முன்பு அவ்விதமாகக் காணப்பட்டது. அதன் காரணம் யாது. ஒன்றும் தோன்றவில்லையே. ஆஹா இவ்வுண்மையை உற்று உணர்ந்தோம். ஆழ்ந்து நோக்கி அறிந்

தோம். அறிந்தோம். இந்த ரகசியம் தெரிந்தோம். நாம்முன்பு, மாயை என்னும் வலிய இருள் நிறைந்த இரவில், ஆசையோடும் கூடிய மோகமென்னும் பெரும் நித்திரையில், இவ்வுலகபோக வாழ்வுஎன்னும் கனவில் மூழ்கி இருந்திருக்கின்ளோம். அதன் பிறகு அன்பு, பத்தி, ஒழுக்கம், சீவகாருண்யம், தருமம், பொறுமை, சத்தியம், அகிம்சை, அடக்கம் நிராசை முதலியவைகளாலும், சாஸ்திரம், சத்சங்கம், கேள்வி, விசாரணை, ஆராய்ச்சி, பூசை, ஜெபம், தவம், வழிபாடு, தியானம், யோகம், நிட்டை முதலியவைகளாலும், பரமகுருவின் அனுக்கிரகத்தாலும் மனத்தூய்மையும், அறிவின் விளக்கமும் ஏற்பட்டு அதன்பிறகு தத்துவஞான மென்னும் ஒளியால் இரவும், இருளும், துயிலும், கனவும் சிறிது நீங்கி, எல்லாம் பொய் மயமாகவும், பாவைக்கூத்தைப்போன்ற வேடிக்கை மயமாகவும் காணப்பட்டது. அதன்பிறகு பிரமக்ஞானமென்னும் பேரொளியால் எல்லாம் நன்மயமாகவும், பிரம சொரூபமாகிய கடவுள் மயமாகவும் காணப்பட்டது. அதன் பிறகுஇப்பொழுது ஆத்மஞானமென்னும் ஒப்பற்ற சூரிய ஒளியினல் இரவும், இருளும், நித்திரையும், கனவும் அறவே பூரணமாக நீங்கி எல்லாம் தன்மயமாகவும், ஆனந்தமயமாகவும் காணப்படுகின்றது.

இதுதான் ரகசியம். இதுதான் உண்மை வேறு காரணம் ஒன்றுமில்லை.

ஆனால் இந்தத் தத்துவஞானம், பிரமக்ஞானம் என்னும் பிரகாசமும் ஆத்மஞானமென்னும் சூரியனும் இதற்குமுன் எங்கே இருந்தன. நம்முள்த்தான் இருந்தன. ஆனால் இதற்குமுன் ஏன் தோன்றவில்லை. காரணம் யாது. அஞ்ஞானமென்னும் மாயைதான் காரணமாகும். இம்மாயை எப்படி ஏற்பட்டது. சங்கல்பத்தினோடும் கூடிய இச்சையால் ஏற்பட்டது. இச்சை எப்படி உண்டாயிற்று பாழும் மனத்தினால் உண்டாயிற்று. ஆனால் இம் மனம் ஆதியில் தூய்மையாகவும், நன்மையாகவும் இருந்துபின்பு இவ்விதம் கெட்ட வழிகளில் இச்சையுற்று. அஞ்ஞானம் செறிந்து துன்புற்றலையக் காரணம் என்ன. ஆன்மாதான் காரணமாக இருக்கின்றது. ஆதிமுதல் ஆன்மாவானது மனத்தை அடக்கி ஒடுக்கித் தன் வழியிலேயே செலுத்தி மெய்யறிவோடும் கலந்து இருந்துவந்தால் தத்துவஞானம், பிரமக்ஞானம், ஆத்மஞானம் என்னும் ஒளிகளும் பிரகாசித்துக் கொண்டிருக்கக்கூடும். ஆன்மாவானது எவ்விதக்கவலைமுதல் யாதுமற்று, சதா ஆனந்தமயமாகவும், தன் மயமாகவும் விளங்கக்கூடும்.

ஆகவே, ஆன்மாவின் அஜாக்ரதையால்தான் இவ் விதம் ஏற்படுகின்றது. ஆனால் ஆன்மாவானது இவ் விதமிருக்கக் காரணம் என்ன! ஆன்மா ஆதியி லேயே தன் சொரூபத்தை நாளுக்குநாள் மறந்து பின்பு தன் சொரூபத்தையும் தன் நிலமைகளையும் அறியாமல் இருந்ததே காரணமாகும். இது உண் மையே. தன்னாலே தான்கெட்டால் அண்ணாவி என்ன செய்வார் என்னும் பழமொழியை. உலகில் ஆண் பெண் முதற் பெரியோர்களும், பாமரர் முதற் பண்டிதர்களும் சர்வ சாதாரணமாகக் கூறக் கேட் டும் எவர்களும இம் மகா உபதேச மந்திர வாக்கி யத்தை அறியவில்லையே. ஆஹா இது மேலான ஆத்மஞான உபதேச வாக்கியமல்லவா. இதன் உண்மையான ரகசியத்தைத் தெரியாது இது உல கப் பழமொழியாகவே நடந்து வருகிறது. ஆன்மா வானது என்றும் இறப்பும் பிறப்பும் அற்று, இன்ப துன்பமு மற்று, உயர்வு தாழ்வு மற்று, அது இது என்னும் பிரிவினையு மற்று, சர்வமும் தானாய்த் தன்மயமாய் சத்து, சித்து, ஆனந்த சொரூபமாய் என்றும்அழிவுறாது விளங்கக்கூடிய. தன் எதார்த்த சொரூபத்தை அறியாமல் இவ்விதமாகத் துன்புற்று அலையும்படி ஏற்பட்டது. ஆனால் ஆத்மஞானமென் னும் சூரியன் நம்முள்ளேயே இருப்பதானால், அஞ்

ஞானமாகிய மாயை முதலியவைகள் இதற்குமுன் ஏன் நீங்கவில்லை.

ஆன்மாவானது தன் சொரூபத்தை அறிந்து அடைவதற்கு விரும்பி, அதற்குரிய இவ்வாத்ம ஞானத்தைக் கருதி முயற்சி செய்யாததே காரண மாகும். இது சத்தியம். இந்த உண்மையான ரகசியத்தை மற்ற எல்லா ஆன்மகோடிகளும் அறிந்து இந்நிலையில் என்றும் ஆனந்தமாக வாழ்ந்தாலல்லவா பொருத்தமாக இருக்கக்கூடும். மேலும், இந்நிலையும் நமக்கு வழுவாது நிலைபெற்று நிற்கவும் கூடும். ஏனெனில், இப்பொழும் மனமானது இறக்காமல், இதனுடன் கூடி இருக்கக்கூடிய நிலையாக இருக்கின்றபடியால், மீண்டும் இம்மனத்தினுல் இவ்வுலகத் தோற்றமும் ஏற்படக்கூடும். அப்பொழுது பிரிவினையும், ஆத்மநிலையின் அன்பின் பிரவாகமும் பரிதாப நிலையும் ஏற்படும். அதனுல் இந்நிலையும் நழுவக்கூடு மல்லவா. நாம் மட்டினும் எப்படி ஆனந்தமாக வாழ முடியும். ஆகவே எல்லா ஆன்ம கோடிகளுக்கும் சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்களும் அடையவேண்டிய முயற்சியை நாம் எடுத்துத்தான் ஆகவேண்டும்.

சத்து, சித்து, ஆனந்த சொரூபமாய், என்றும் விளங்கக்கூடிய பரப்பிரம சொரூபத்தினிடத்தே

தோன்றி, அச்சொரூபத்தினிடத்திலேயே அச்சொரூபமாகவே என்றும் வாழக்கூடிய, சர்வ ஆன்மகோடிகளே, நம் சகோதரர்களாகிய ஆன்ம கோடிகளே, நம் சொரூபமாகிய ஆன்மகோடிகளே, நம் அறிவிற்கறிவாகிய ஆன்மகோடிகளே, மெய்ஞானமாகிய ஆன்மகோடிகளே, நம் மனமார்ந்த ஆன்மகோடிகளே, ஆனந்தமாகிய ஆன்மகோடிகளே, நான் இதுவரையில் அஞ்ஞானத்தினாலும், இவ்வுலகிற் தொண்டுதொட்டுவரும் பழக்க வழக்க முதலிய வாசனைகளினாலும், உங்களைப் பற்பலவாகவும், வெவ்வேறாகவும், பேதாபேதமாகவும், துவேஷமாகவும், விருப்பு வெறுப்பாகவும், உயர்வு தாழ்வாகவும், இன்னும் பலவாகவும் கொண்டு கெட்டு அலைந்தேன். ஐயோ வீணாக அலைந்தேன். இன்றுதான் எந்தை பரமகுருவின் அனுக்கிரகத்தாலும், ஆத்மஞான மென்னும் அருணனின் ஒளியாலும், உண்மையை அறிந்தேன் அறிந்தேன், ஆனந்தித்தேன், ஆடினேன், பாடினேன், ஓடினேன், உருண்டேன், புரண்டேன், ஆனந்த அருவிசொரியச் சிரித்தேன். பின்பு, உபசாந்தமாய்ப் பேரின்ப சொரூபமாய், பரமசுகமாய் அமர்ந்தேன் அமர்ந்தேன். அதன பின்பு அகமுதற் சர்வமுமற்று, நினைப்பு மறப்பு மற்று, அது இது என்பதுமற்றுத் தானே அது

வாய்த் தன்மயமாய், பரப்பிரம நிர்க்குணமாய் சும்மா இருக்கும். அத்தகைய மாமௌன நிலையில் அமர்ந்தேன் அமர்ந்தேன். அந்தோ அந்தோ, அந்நிலையை அடைவதற்கு நான் பட்டபாடுகளை என் சொல்வேன் என் சொல்வேன். இன்று அடைந்தும் பாழும் மனமானது பூரணமாக இறந்து ஒழியாத படியால், மீண்டும் இவ்வுலகத் தோற்றம் ஏற்பட்டு அந்நிலை நழுவி நழுவி, ஆத்மஞான நிலையின் அன்பின் பிரவாகத்தினால் நம் சொரூபமாகிய உங்களையும், உங்களுடைய செய்கைகளையும், நடவடிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும், குணங்களையும் நிலைமைகளையும், தன்மைகளையும், இன்ப துன்பங்களையும், இன்னு மற்றவைகளையும், நேரிற் பார்க்கும் பொழுதும், கேட்கும் பொழுதும், நினைக்கும் பொழுதும், சிந்திக்கும் பொழுதும், அன்பின் பிரவாகத்தினால், மனமானது உருகி உருகிக் கரைகின்றது. கண்கள் நீர் சொரிந்து சொரிந்து மங்குகின்றது. காதுகள், புண்பட்டு புண்பட்டு, அடைபடுகின்றது. கால், கை முதலாகச் சரீரம் சோர்ந்து சோர்ந்து ஒடுங்குகின்றது. பரிதாபம் என்னும் பெரும் சாகரத்தினிடத்தே எனை மூழ்கிவிக்கின்றது. என் செய்வேன் எவ்வழியில் திருப்புவேன் நீங்கள் எல்லாம் இவ்வுலகநிலை நீங்கப்பெற்று, ஆத்ம

ஞான நிலையில் நம் சொரூபமாய் ஆனந்தவடிவமாய் விளங்கக்காண்கின். இப்பரிதாபநிலை நீங்குமே அல்லாமல் வேறு வழி அறியேன் இதற்கு என்செய்வேன், என் செய்வேன்.

மரம், செடி, கொடி, புல், பூண்டு என விளங்கக்கூடிய ஆன்ம கோடிகளே. உங்கள் நிலைமைதான் மிகவும் பரிதாபகரமாக தோன்றுகிறதென்றால் இதனிலும் எறும்பு முதல் யானை வரையிலுள்ள பிராணிகளின் நிலைமையோ மிகுந்த பரிதாபமாகத் தோன்றுகின்றது. இவைகளிலும் எல்லாவற்றிலும் சிறந்த மேலான மாந்தர்களின் நிலைமையோ மிகவும் பரிதாபகரமாக இருக்கின்றது. இதனிலும் கல்வி அறிவிற் சிறந்தவர்களென்று விளங்கக்கூடிய வர்களின் நிலைமையோ அதிகப் பரிதாபகரமாக இருக்கின்றது. இதனிலும் வித்வான்களென்று விளங்கக்கூடியவர்களின் நிலைமையோ அதிகப்பரிதாபகரமாக இருக்கிறது. இதனிலும் துறவிகளென்று விளங்கக்கூடியவர்களின் நிலைமையோ அளவிறந்த பரிதாபகரமாகத் தோன்றுகின்றது. இதற்கு என்செய்வேன் எக்காலத்தில் இவ்வுலகிலுள்ள சர்வ ஆன்ம கோடிகளும், ஆனந்தமாக வாழப்பெற்று எனது இரு கண் குளிரக் கண்டும் இரு செவிகுளிரக் கேட்டும், இருதயம் பூரித்தும்

ஆனந்த வடிவமாய்த் தாண்டவம் செய்யப்போகின்றேன். மீண்டும் மாமௌன நிலையில் அமர்ந்து சும்மா இருந்து, சுகம்பெறப்போகின்றேன். தெரியவில்லையே. ஒருவழியும் தோன்றவில்லையே.

ஐயோ, மற்ற ஆன்மகோடிகள்தாம் அறியாதபடி துன்புற்று அலைகிறதென்றால், எல்லாவற்றிலும் சிறந்த மேலான ஆறறிவோடும் கூடிய மாந்தர்கள் அலைவதுதான் அளவிறந்த பரிதாபகரமாகவும், ஆச்சரியமாகவும் இருக்கின்றது. ஐயோ இவர்களுக்குக் கண்ணிருந்தும், மெய்யறிவிருந்தும், கல்வி இருந்தும், ஞான மிருந்தும், பகுத்துணரக்கூடிய தன்மை இருந்தும், மேலும் இன்ப துன்பங்களையும், உண்மை பொய்மைகளையும், நன்மை தீமைகளையும், நித்திய அனித்தியங்களையும், கண்கூடாக நேரிற் கண்டும், அனுபவித்தும், மீண்டும் அவைகளைக் கொண்டு உழல்கின்றார்களே இது என்ன அற்புதம் இது என்ன ஆச்சரியம் ஐயோ, இது பாழும் மாயையின் வலியா, அல்லது கொடிய மனத்தின் செய்கையா, இரு வினையின் செயலா, அல்லது இவ்வுலகத்தின் இயல்பா, பழக்க வாசனையா என்பதாக ஆராய்ந்து இதன் உண்மையை இன்றுதான் உணர்ந்தேன் இது என்ன. அநீதமும் எம... மாகவுமல்லவா இருக்கின்றது. இவர்கள் என்று இவ்வுண்

மைகளை அறிந்து நன்மையை அடையப்போகின்றார்கள் நாம் இவர்களுக்கு என்னசொல்வது அப்படிச் சொல்லினும் கேட்பார்களா. அப்படிக் கேட்கினும் அவ்வழியில் நடப்பார்களா. ஒருக்கால் கேட்டு அவ்வழியில் நடப்பினும், மனம், மாயை, இச்சை, முதலியவைகளும், செயற்கை வாசனைகளும், இவைகளைக்கேட்டு நடக்கவிடுமா இதற்கு என்செய்வது இவர்கள் கேட்கினும் கேட்காவிடினும், நம் அன்பையும், ஆவலையும், மனஆறுதலையும் முன்னிட்டுச் சொல்லித்தான் ஆகவேண்டும். இல்லையேல் சமாதானம் ஏற்படாது பரிதாபகரமான இந்நிலையும் நீங்காது ஆகவே, இவர்கள் அத்தகைய மேலான நிலையை அடைந்து வாழப்பெறுவிடினும், ஆத்மார்த்த சகோதர நிலையும், மெய்யன்பு நிலையும், உத்தமமான மனித நிலையும் கூடிய, தெய்வீக நிலையிலாவது எல்லோரும், ஆனந்தமாக வாழ்வதற்குரியதும், நமக்குத் தோன்றியதுமான சில உண்மையான விஷயங்களை விள்கின்றேன். அன்பாகச் சொல்கின்றேன். சொல்கின்றேன்.

நமது ஆத்மார்த்த சகோதர சகோதரிகளே, நம் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, நம் அறிவிற்கறிவாகிய சகோதர சகோதரிகளே, நம் உணர்வுக்குணர்வாகிய சகோதர சகோதரிகளே,

நம் உயிருக்குயிராகிய சகோதர சகோதரிகளே, நம் ஞானமாகிய சகோதர சகோதரிகளே, நம் நேத்திர மான சகோதர சகோதரிகளே, நீங்கள் எல்லாவற்றி லும் சிறந்த, மேலான மாந்தர்களாக இருந்தும் மற்ற பிராணிகளிலும் கீழ்மையான முறையில் துன்புற்று அலைந்து உழல்கின்றீர்களே. இது பொருத்தமாகுமா. இது தருமமாகுமா. இது நியா யமாகுமா. உங்களுடைய நிலைமையைக் கண்டு, அன் பின் பெருக்கால் நம்மனமானது பரிதாப நிலையுள் ஆழ்ந்திருக்கின்றது. இதை மாற்றமுடியவில்லை. ஓர் ஊரில் உள்ள அனைவரும், தரித்திரப் பிணியினுலும் பசிப்பிணியினுலும், சரீரப்பிணியினுலும், துன் புற்று வருந்தும்பொழுது, ஓர் பெரும் செல்வந்தன் மட்டிலும் லோபத் தன்மை பொருந்திய கல் மனத் தனய்ச் சுகமாகவும், இன்பமாகவும் வாழ்வதைப் போன்று நான் எப்படி வாழமுடியும் முடியவில் லையே. அன்பும்,கருணையும், தருமமும், நிறைந்த மற் ெருரு மிக ஏழ்மையானவன், இந்நிலையைக்கண்டு இவர்களுக்கு வேண்டியதை அளித்து இத்துன் பத்தை நீக்க வழியில்லாமல், மனமானது வருந்தி வருந்தி, உருகி உருகி மனம் அயர்ந்து, துன்புற்றுப் பரிதாப நிலையில் மூழ்குபவன் போன்று, நமக்கும் ற்பட்டுள்ளது. அடக்க முடியவில்லை. ஆகவே உங்

களை மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். மிக்க அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். நம் வாக்கியத்தைச் சிறிது அங்கீகரிப்பீர்களாக அல்லது உங்களுக்கு வேண்டா விடினும் நம் நிமித்தமாகவாவது சிறிது அங்கீகரிப்பீர்களாக. உங்கள் எல்லோரிடத்திலும், என்றும் குறைவுறாத அளவிறந்த அன்பென்னும் பெரும் செல்வம் இருக்கின்றது. உபசாந்தமென்னும் ஒப்பற்றபலமிருக்கின்றது. எவ்வாயுதமும் நிகரில்லாத ஒப்பற்ற அகிம்சை என்னும் ஆயுதமிருக்கின்றது. சத்தியமென்னும் உயர்வான வீடு இருக்கின்றது. மெய்யறிவென்னும் பிரகாசம் பொருந்திய ஒப்பில்லாத விளக்கு இருக்கின்றது. அளவில்லாத பிரகாசமும் மிக உஷ்ணமும் பொருந்திய ஞானமென்னும் சூரியன் இருக்கின்றது. அளவில்லாத பேரின்பமென்னும் விளைபோகமிருக்கின்றது புன்னகை என்னும் குளிர்ந்த தண்ணீர் இருக்கின்றது. பூரண திருப்தி என்னும் அமிர்தம்போன்ற ஒப்பற்ற உணவு இருக்கின்றது. சமாதானமென்னும் சினேகம் இருக்கின்றது. மனத்தூய்மை என்னும் வெண்மையான உயர்ந்த ஆடை இருக்கின்றது. நிராசை என்னும் அழகிய ஒப்பற்ற ஆபரணம் இருக்கின்றது. புண்ணியமென்னும் புதையல் இருக்கின்றது. கருணை

என்னும் வழி இருக்கின்றது. தருமமென்னும் துணை இருக்கின்றது. நிஷ்காமிய கருமமென்னும் தொழில் இருக்கின்றது. தவமென்னும் நித்திரை இருக்கின்றது. நிஷ்ட்டை என்னும் சுகமிருக்கின்றது. உயர்நிலை என்னும் பதவி இருக்கின்றது. உங்களுக்கு வேண்டிய இவைகள் எல்லாம் உங்களிடத்தே இருந்தும், ஐயோ ஏன் இவ்விதம் அலைதல் வேண்டும்.

என்றும் ஆனந்தமாக வாழக்கூடாதா ஏன் பாழும் ஆசை, மோகம், பந்தம், காமம், கோபம், லோபம், மாயை, பேதம், துவேசம், வெறுப்பு, பகை, இருவினை, முதலியதைக்கொண்டு துன்புற்றலைதல் வேண்டும். உங்களுடைய எதார்த்த சொரூபத்தை நீங்கள் அறிந்தால், இவைகள் சிறிதும் ஏற்படாது. அப்படி அறியாவிடினும், மற்றவர்களை உண்மை அனபோடும் கூடிய மெய்யுணர்வால், உற்றுக் கவனியுங்கள். ஆழ்ந்து நோக்குங்கள். அவர்கள் யார்? உங்கள் சொரூபமல்லவா. உங்கள் சகோதர சகோதரிகளல்லவா. உங்களுடைய உயிரல்லவா, உங்கள் சரீரமல்லவா, இது உண்மையா. பொய்மையா என்பதை நன்ருகப் பாருங்கள். இந்த உண்மையை அவர்கள் அறியாமல் உங்களுக்கு வெறுப்பு என்னும் தரித்திரத்தை அளித்தால் நீங்

கள் அன்பு என்னும் செல்வத்தை அளியுங்கள் மேன்மேலும் அளியுங்கள். உங்களுக்குக் கீழ்ப் படிந்து பணிவார்கள். அவர்கள் கோபமென்னும் பலத்தை உங்கள் மீது தாக்கினல் நீங்கள் சாந்த மென்னும் பெரும் பலத்தால் தாங்குங்கள். இதுவே ஜெயமுறும். இம்சை என்னும் ஆயுதத்தை உங்கள் மீது பிரயோகித்தால், நீங்கள் அகிம்சை என்னும் ஒப்பற்ற ஆயுதத்தை அவர்கள் மீது பிரயோகிங்கள் இதுவே வெற்றிபெறும். துன்பமென்னும் பிணியை அளித்தால், நீங்கள் இன்பமென்னும் சுகத்தை அளியுங்கள்.

தீமை என்னும் விஷத்தை அளித்தால் நீங் கள் நன்மை என்னும் அமிர்தத்தை அளியுங்கள் கொடூரமான பார்வை என்னும் அக்கினியை வீசி னல் நீங்கள் புன்னகை என்னும் குளிர்ந்த தண் ணீரை வீசுங்கள். இகழ்ச்சி என்னும் கற்களால் அடித்தால் நீங்கள் புகழ்ச்சி என்னும் புட்பங் களால் அடியுங்கள். அடி என்னும் தண்டனையைச் செய்தால் நீங்கள் மன்னிப்பு என்னும் தாழ்ந்து கொடுங்கள். அறியாத் தன்மை என்னும் இருளில் கெட்டவழிகளில் அவர்கள் அலேந்தால், நீங்கள் அறிவு என்னும் விளக்கை அளித்து நீக்குங்கள். வன்மை என்னும் குழிக்குள்க் கிடந்தால் கருணை

என்னும் வழியிலேற்றிவிடுங்கள். பசிப் பிணியால் வாடக்காணில் உடனே தன்னால் ஆனதைக் கொடுத்து அதை மாற்றுங்கள். சரீரப் பிணியாலும் பெரும் ஆபத்தாலும் வருந்தக் கண்டால் உடனே உங்களால் ஆனதைச் செய்யுங்கள். எல்லோரும் உங்களுக்குக் கீழ்ப்படிவார்கள், பணிவார்கள், நன்மை செய்வார்கள், அடிமை ஆவார்கள், போற்றுவார்கள். இன்பம் அளிப்பார்கள். இது சத்தியம். இது நிச்சயம். இதுதான் மனிதத் தன்மையாகும். இதுதான் தெய்வீகத் தன்மையாகும். இதுதான் ஆத்மார்த்த நிலையாகும். பொருத்தமாகும். நியாயமாகும். இவ்விதம் செய்யாமல் அவர்கள் அறியாமற் செய்வதையே நீங்களும் பதிலாகச் செய்தால் அது பொருத்தமன்று. மூடத் தன்மையாகும். மிருகத் தன்மையாகும். அசுரத் தன்மையாகும். அவர்களைப் போன்று நீங்களும் கஷ்டநஷ்டங்களையும், கீழ்மையான நிலைகளையும் அடையப்பெறுவீர்கள். இது நிச்சயம். இது சத்தியம். சிறிய குழந்தைகளும், குடிவெறியர்களும் குருடர்களும், பைத்தியம் பிடித்தவர்களும், என்னென்ன குற்றங்கள் செய்யினும் அவைகளை வேடிக்கையாகவும், சிரிப்பாகவும், கொண்டு அவர்களுக்கு நன்மையை அளிப்பதைப்போன்று மற்ற

வர்களுக்கும் அளியுங்கள், என்றும் உங்களுடைய குற்றங்களையும், நிலைமைகளையும், சொரூபத்தையும் ஆழ்ந்து பாருங்கள் கண், காது, முதலிய கருவி களும் கல்வி, அறிவு, புத்தி, ஞானம், முதலியவை களும் எதற்காக ஏற்பட்டுள்ளது.

என், உற்று உணர்ந்து விசாரித்துப் பார்க்கக் கூடாதா. அப்படிப் பார்க்கின் உண்மை விளங்கக் கூடுமே. அவர்கள் யார்? உங்கள் சொரூபமல்லவா உங்களுடைய சகோதர சகோதரிகளல்லவா. நீங் கள் தாய், தந்தையர், மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர் முதலிய இவர் களையே உங்களுக்குத் துணையாகவும், பந்துக்களாக வும், அன்பாகவும், கொள்ளுகின்றீர்களே இவர்களி லும் ஒருவர்க்கொருவர் கொலை செய்வதும், பகைப் பதும், வெறுப்பதும், கெடுதி செய்வதும், துன் புறுத்துவதும் உலகில் கண் கூடாக நடப்பதைக் காண்கின்றீர்களே. அன்னியர் என்று கருதக்கூடிய வர்கள். பெரும் ஆபத்துக்களை நீக்குவதும், நன் மையைச் செய்வதும், இன்பமளிப்பதும், உலகில் நடக்கிறதல்லவா. மேலும் ஆடு, மாடு, நாய், பூனை, குதிரை முதலிய இன்னும் பல மிருகங்களையும் கிளிஃ மைனு, புரு முதலிய பல பட்சிகளையும் எவ்வளவு அன்பாகப் பாதுகாத்து வளர்க்கின்றீர்கள். இதன்

காரணமென்ன. அன்புதான் எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கின்றது. அன்பானது எவ்வளவுக்கெவ்வளவு உண்டோ அவ்வளவுக்கவ்வளவு விருப்பும் இன்பமும் உண்டு இல்லையேல் அவ்வளவுக்கவ்வளவு வெறுப்பும் துன்பமும் உண்டு ஆசவே உண்மையான அன்போடும் கூடிய மனந்தான் காரணமாகும். ஐயோ உலகில் எவ்வுயிராக இருப்பினும் அது துன்புறுங்காலத்தில் மற்ற மாந்தர்களாக உள்ளவர்கள் எப்படிப் பார்த்துக்கொண்டிருக்கவோ, அல்லது மற்றவர்களைத் துன்புறுத்தவோ, அல்லது கொலை செய்யவோ மனம் எப்படி ஏற்படுகின்றது. ஆஹா இது ஆச்சரியமல்லவா இவர்களை எதற்கு ஒப்பிடுவது ஒன்றும் தோன்றவில்லையே. நம் ஆத்மார்த்த அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இனிமேலாவது உண்மையைத் திடமாகத் தெரிந்து, உலகிலுள்ள சர்வ ஆன்ம கோடிகளும் ஒன்று. எல்லாத் தேசத்தவர்களும் ஒன்று. எல்லா வகுப்பினரும் ஒன்று. எல்லா மதத்தவரும் ஒன்று. எல்லாப் பாஷை இனரும் ஒன்று. எல்லாம் நம் சொரூபம் எல்லோரும் நம் சகோதர சகோதரிகள் என்பதாகக்கொண்டு, எல்லோரும் ஒற்றுமையாகவும், அன்பாகவும், ஆனந்தமாகவும், தெய்வீக மனிதத் தன்மையுடன் வாழப்பெறுங்கள். ஆனந்

தத் தாண்டவம் செய்யுங்கள். நம் ஆவலைத் தீருங்கள். நம் குறைவுபாட்டை நீக்குங்கள். நம் ஏக்கத்தைத் தீருங்கள். நமக்கும் ஆனந்தம் அளியுங்கள். நாம் மீண்டும் அத்தகைய மேலான நிலையில், ஆனந்தமாக அமரச்செய்யுங்கள். இந்தப் பெரும் உதவியை நமக்குச் செய்யுங்கள். உலகப் பரிதாபமென்னும் சாகரத்தினின்றும் நம்மைக் கரை ஏற்றுங்கள். நீங்களும் மேலான அந்நிலையை அடைய விரும்பினுல் அன்பைப் பெருக்குங்கள். அகத்தைத் திருத்துங்கள். அறிவைப் பெருக்குங்கள். ஆன்மாவை அறியுங்கள். ஆனந்தம் கொள்ளுங்கள். அந்நிலையுட் சேருங்கள். அது இது என்பதற்றுத் தானே அதுவாய்த், தன்மயமாய் நில்லுங்கள். முன் தோன்றியுள்ள பரப்பிரம சொரூபமாகிய கடவுள் சொரூபத்தில், இரண்டறச் சேருங்கள். விதேககைவல்ய மோட்சப்பதவியை, எல்லோரும் அடைந்துய்யப் பெறுங்கள். பெறுங்கள்.


ஓம்

சாந்தி சாந்தி சாந்தி

ஓம் ஓம் ஓம்

ஓம்

உலகெலாம் இன்ப உருவமாய் வாழ்க.



ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுருசுவாமி அவர்கள் அந்நந்நிலைகளில் அருளிய நூல்கள்.

1. சிவா அமிர்தம்.
2. கடவுளின் உண்மை விளக்கம்.
3. யோகத்தின் ரகசியம்.
4. சும்மா இருக்கும் சுகம்.
5. ஆத்மஞானப் பேரின்பக்கீதம்.
6. ஆத்மானந்த போதம்.
7. ஆத்மஞான நிலையின் அன்பின் பிரவாகம்.

இந்நூல்கள் வெளிவந்துள்ளன. கீழ்க்கண்ட நூல்கள் கையெழுத்துப் பிரதிகளாக இருக்கிறது. அச்சியற்றி வெளியிட விருப்பமுள்ளவர்கள் வரலாம். இனமாக அளிக்கப்படும்.

8. பரமார்த்த இன்பசாகரம்.
9. பத்திஞானம் முதற்பல உண்மைகளின் விளக்க வேடிக்கை இன்பசாகரம்.
10. ஆதிப்பூர்வத்யாகமென்னும் உண்மைப் பிரகாசம்.
11. தத்துவஞானக் கும்மி.

ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுருசுவாமி.
திருவொற்றீஸ்வரர் இலவச உயர்நிலைப் பாடசாலை,
குளை - வேப்பேரி, சென்னை-7.